

நீர் மொள்ள அனுப்பினோம் சுண்டெலியை





நீர் மொள்ள அனுப்பினோம் சுண்டெலியை

லித்துவானிய நாடோடிப் பாட்டுக்கள்

ஓவியர்:
தி.பல்ச்சூனேனே



கூலம் களைந்தோம்,

கூலம் அரைத்தோம்

கூலம் களைந்தோம், கூலம் அரைத்தோம்,
நீர் மொள்ள அனுப்பினோம் சுண்டெலியை
பொன்மஞ்சள் மணல் பாதையில்,
சின்னப் பாலம் வழியே.
ஓநாய்க்கு அது பயந்தே
வீணுக்கிற்று வெகு நேரம்.
வழி தவறிற்று, அழுது கதறிற்று.
பழகும் கிணறோ—அருகே.















மாறுகண்ணு, முயலே!

மாறுகண்ணு, முயலே—ஆமாம்!
வாராதே என் பின்னே—ஆமாம்!
கறிகாய்த் தோட்டம் புகுவாய்—ஆமாம்!
கொறிப்பாய் முட்டைக்கோசை—ஆமாம்!
எட்டிப் பிடிப்பேன் உன்னை—ஆமாம்!
நிமிட்டுவேன் உன் காதை—ஆமாம்!
ஒட்ட அறுப்பேன் வாலை—ஆமாம்!







ம்பூ-ம்பூ, நான் கூர்ங்கொம்பன்!

ம்பூ-ம்பூ, நான் கூர்ங்கொம்பன்,
ம்பூ-ம்பூ, நான் நீள்வாலன்,
ம்பூ-ம்பூ, நான் நெடுங்காதன்,
ம்பூ-ம்பூ, நான் பூச்சாண்டி,
ம்பூ-ம்பூ, பயங் காட்டுவேன்,
ம்பூ-ம்பூ, உன்னை முட்டுவேன்.







துள்ளி ஓடிற்று உள்ளான் குருவி

துள்ளி ஓடிற்று, சுற்றி ஆடிற்று
உள்ளான் குருவி புல்வெளியில்.
பளபளத்தது அதனிடம்
சிறு வாச்சி, சிறு வாச்சி.

வீட்டை அது கட்டிற்று
மேட்டின் மேல், மேட்டின் மேல்.
கூவி அழைத்தது தோழியை
பூவுடனே, பூவுடனே.







МЫШКУ ПО ВОДУ ПОСЛАЛИ

Литовские народные песенки

На тамильском языке

முன்னேற்றப் பதிப்பகம்

மாஸ்கோ

விற்பனையாளர்கள்

நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் பிரைவேட் லிமிடெட்

சென்னை

மொழிபெயர்ப்பாளர்: பூ. சோமசுந்தரம்

சோவியத் நாட்டில் அச்சிடப்பட்டது

$M \frac{70801\text{-}741}{014\,(01)\text{-}79}$ 802-79 4803000000

இரண்டாம் பதிப்பு